**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 123** **நாள்: 30.08.2018**

**சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலம் நாளையுடன் (31.08.2018) முடிவடைவதால் சொத்து உரிமையாளர்கள் உடனடியாக சீராய்வு படிவத்தினை சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சொத்து வரி சீராய்வு தொடர்பாக அரசால் 19.07.2018 மற்றும் 26.07.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவீதம் மிகாமலும், குடியிருப்பல்லாத கட்டடங்களுக்கு 100 சதவீதம் மிகாமலும், சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சொத்து உரிமையாளர்களும், தங்களது சொத்து தொடர்பாக சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை (Self Declaration Form) 31.08.2018–க்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள்/வார்டு அலுவலகங்களில் உள்ள முகப்புகளில் (Counters) உரிய படிவத்தினை (Self Declaration Form) பெற்று கொண்டு அல்லது இணையதளத்தில் (www.chennnaicorporation.gov.in) சொத்து விவர அறிக்கை படிவத்தினை (Self Declaration Form) பதிவிறக்கம் (download) செய்து சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்களில் உள்ள முகப்புகளில் (Counters) நேரடியாக சமர்ப்பிக்கவும், இணையதள முகவரி (www.chennnaicorporation.gov.in) மூலமாகவும், சொத்து சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை (Self Declaration Form) Online மூலம் பதிவேற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதில் 29.08.2018 வரை 8 இலட்சத்து 35 ஆயிரத்து 955 சொத்து உரிமையாளர்கள் சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர அறிக்கையை தாக்கல் செய்ய படிவங்களைப் பெற்றுள்ளனர். அவற்றில் மக்கள் ஆர்வமுடன் பூர்த்தி செய்து 3 இலட்சத்து 29 ஆயிரத்து 111 படிவங்கள் திரும்ப சமர்ப்பித்துள்ளனர். இதில் இணையதளம் மூலமாக மட்டும் 74 ஆயிரத்து 947 படிவங்கள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சொத்து விவர அறிக்கை தாக்கல் செய்த உரிமையாளர்களின் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளும்போது, கட்டிடத்திற்கான வயதுக்கேற்ற கழிவுகளை அனுமதித்து சொத்துவரி

விதிக்கப்படும். சொத்துவரி விவர அறிக்கை உரிமையாளர்களால் தாக்கல் செய்யாத இனங்களுக்கு நேரிடையாக களஆய்வு செய்து சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும்.

மேலும் சொத்து உரிமையாளர்கள், ஏற்கனவே சொத்து வரி அறிக்கையினை தாக்கல் செய்யும் போது தவறுதலாக அளவீடுகள் மற்றும் உபயோகத்தன்மை அளித்திருப்பின் மண்டல உதவி வருவாய் அலுவலர்கள் மூலமாக அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சொத்துவரி அறிக்கை தாக்கல் செய்ய ஏதேனும் தகவல் அறிய வேண்டுமெனில் அலுவலர்களை கீழ்கண்ட கைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பதவி | கைபேசி எண் | வ. எண் | பதவி | கைபேசி எண் |
|---|---|---|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் | 9445190742 | 10 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–8 | 9445190088 |
| 2 | உதவி வருவாய் அலுவலர் (தலைமை இடம்) | 9444817161 | 11 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–9 | 9445190089 |
| 3 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம் – 1 | 9445190081 | 12 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–10 | 9445190090 |
| 4 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–2 | 9445190082 | 13 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–11 | 9445190091 |
| 5 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–3 | 9445190083 | 14 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–12 | 9445190092 |
| 6 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–4 | 9445190084 | 15 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–13 | 9445190093 |
| 7 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–5 | 9445190085 | 16 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–14 | 9445190094 |
| 8 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–6 | 9445190086 | 17 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–15 | 9445190095 |
| 9 | உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–7 | 9445190087 | | | |

மேலும் சொத்துவரி விவர அறிக்கை தாக்கல் செய்ய 31.08.2018 அன்றே கடைசி தினமாக உள்ள நிலையில் சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி விவர அறிக்கை இணையதளம் மூலமாக தாக்கல் செய்ய ஏதுவாக 24 மணிநேரமும் இணையதள சேவை முழுமையாக இயங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை அலுவலகங்கள் வேலை நேரத்தை கடந்தும் இரவு 10.00 மணி வரை இயங்கும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, சொத்து விவர சுய மதிப்பீட்டு அறிக்கையினை (Self Declaration Form) தாக்கல் செய்யாத சொத்து உரிமையாளர்கள், இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது சொத்து விவர சுய மதிப்பீட்டு விவர அறிக்கையினை உரிய படிவத்தில் (Self Declaration Form) பூர்த்தி செய்து அலுவலகத்தில் வழங்கியோ அல்லது இணையதளம் மூலமாக 31.08.2018க்குள்ளாக உடனடியாக சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**